# ‘இந்தா விபீஷணா, இலங்காபுரி இராஜ்யம்!’

## ‘ஆசியாவின் ஜோதி’ என்ற முகஸ்துதிக்கா இந்த யாத்திரை?

## திட்டமுண்டா? குறிக்கோள் உண்டா? கடல்கடந்து செல்வதற்கு?

—(0)—

### பரிகாசத்திற்குரிய நடுநிலைமைப் பேச்சும் பொருந்தாச் செயலும்!

—(0)—

## எந்தநாட்டுப் பிரதமராவது இத்திருக்கோலம் கொண்டதுண்டா?

Phone No. 4502

Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (12—10—49) வெளியீடு (13—10—49) [ இதழ் 63

“ நான் இதற்கு முன் அமெரிககா சென்றதில்லை. புதிய அனுபவம பெற எப்பொழுதும் எனக்கு விருப்பமுணடு.”

“ எனக்கு நிறைய அங்கு பணிகள இருககின்றன. அப்பணிகள் ஐந்தாறு பககங்களில் அச்சு எழுத்துக்களால பொறிககபபட்டுள்ளன.”

“மூன்று வாரங்களுக்குப்பிறகு தாய்நாடு திரும்புவேன்.”

* * *

“எங்கள் நேரு
அமெரிக்கா சேர்ந்தார்,
கைகூப்பித் தொழுவோம்...
......தொழுவோம்.”

என்று பாடிக்கொண்டே வந்தார், நமது ஆஸ்தானக் கவி!

“நம் ஏழை மக்களுக்குப் பலனுண்டோ....உண்டோ?”

என்று பாடிக்கொண்டே வந்தான் ஒரு பாட்டாளி நண்பன்!

* * *

நாட்டு கௌரவம் உயருகிறது, பண்டித ஜவஹரின் அமெரிக்கப பிரயாணததால; ஆம! அதில் எவருக்கும் ஆட்சேபணை இருக்க நியாயமில்லை. நமதுநாட்டின் பிரதமா, அமெரிக்க அதிகாரிகளால, மதிக்கப்படுகிறா. மரியாதைச் செய்யப்படுகிறார், போற்றபபடுகிறார், புகழபபடுகிறார், பூரிப்புப் பொங்கிவழிகிறது நமது உள்ளங்களில்.

பலம் பொருந்திய ஏகாதிபத்தியப் பிடியில இருநூறு ஆண்டுகள் சிக்கிக்கிடந்த காலத்தில், அமெரிக்கா உள்பட வெளிநாடுகளில், ‘கூலிகள்’ என்று நம்மவாமீது வீசபபட்ட மனம் துடிக்கும் சொல்லை, இன்று மறந்துவிட்டு, அரசியல் அடிமைத்தனம் அகன்றதும், நமது நாட்டின் பிரதமருக்கு, ‘முடிசூடாமன்னா’ என்று புகழ் மாலைச்சூடப்படுகிறது கண்டு, எவருக்குத்தான் முகமும் மனமும் மலராமல இருக்கும! நாமும் மகிழ்கிறோம், பெருமிதம் கொள்ளுகிறோம், பெருந்தலைவருக்கு, அமெரிக்காவால வரிசைபல வழங்குவது கேட்டு.

போதுமா இதுமட்டும், இத்துணைக்கண்டம ஈடேற—முன்னேற—தொழில வளம்பெற? மக்களின் வறுமை, பஞ்சம், பட்டினி பறந்தோடிவிடுமா, பண்டித ஜவஹருககு அமெரிக்கா புரியும ஆடம்பரமான உபசாரத்தால்? வேலையில்லாதோர் பட்டாளத்தில பங்கு கொண்டுள்ள பல கோடி மக்களின் கண்ணீர், துடைக்கப்பட்டுவிடுமா, தனித் தலைவருக்கு, ட்ரூமென் காட்டும் மன நெகிழ்வினால்? மக்களுக்குள்ள மனவேதனை, மற்றம் பெற்றுவிடுமா, மாசிலா மாணிக்கத்திற்கு, மண்டலாதிபதியின் மரியாதைச் சொற்களால்? இவ்வளவிற்கும், ‘ஆம்!’ என்று கண்ணால் கூட ஜாடை காட்டமாட்டார்களே, அரசியல் ஞானம் அனுத்துணை உடையோரும்!

பலநாளாக, ஆங்கிலேயா ஆட்சியில், ‘அடிமை—கூலி’—என்ற பொதுவாக வெளிநாட்டார்—குறிப்பாக வெள்ளையா. கூறக் கேட்டுக்கேட்டு, அதனை பலதைத் தோன்றும்! “தாழ்வு மனப் பண்பாடு’ நமது உளளங்களில் ஆழப பதிந்து போய் இருக்கிறது. இந்தச்சூழ்நிலையில், நமது பிரதமருக்கு, அதுவும் அரசியல் விடுதலைப்பெற்ற இருபத்தைந்துத் திங்களுக்குள. ‘ஆசியாவின்ஜோதி’ ‘ஆசியாவின் தலைவர்’ என்ற அடைமொழிகள், அணுகுண்டால் தரபபடுவது கேட்டால், நம்மவா மனம், தாழ்வு மனபபண்பால் நொந்து நொந்து நொறுங்கிப போயிருக்கிற நம்மவர் நெஞ்சம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிககவும், முன்னுள்புண் ஆற்றப்பட்டு

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

## அடக்குமுறை வீசுவதில் அதற்கிணை எது?

### பாகிஸ்தான் முன்னேறுகிறது!

பாகிஸ்தான், பொருளாதாரத் துறையில், இந்தியத் துணைக்கண்டத்தை விட எத்தனையோ மடங்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று, சேத் ராமகிருஷ்ண தால்மியா சில நாளைக்கு முன் சுட்டிக் காட்டினர். தொழில் திட்டங்கள் பல தீட்டபபட்டிருக்கின்றன என்றும், அவைகளில சில வறறை நிறைவேறற வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றும் செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. ஒரு நாட்டின தொழில் முன்னேறறம்-செல்வவளாச்சி- அந்த நாட்டின் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயாத்த உதவும என்பதில் சந்தேகமில்லை. வேலையற்றுத் திரிவோா தொகையும், குறைய வழிஏறபடும் இத்தகுச், செயலகளால். இவைகளைச் செயத ஆளவந்தார்களுக்கு மக்களின மதிப்பும் ஆசீயும கிடைககும்.

பாகிஸ்தான் ஆளவந்தார்களுக்கு மக்களின் அன்பைப பெறுவதோடு மட்டும் இருந்துவிடப பிரியமிருப்பதாகத தெரியவில்லை. மக்களின் வெறுப்பையும் கண்டிப்பாகச் சமபாதித்தேயாக வேண்டும் என்ற முடிவிற்கு வந்து விட்டிருக்கிறார்கள் போல தெரிகிறது!

‘1949-ல் பாகிஸ்தான் பொது பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு அவசரச் சட்டத்தைப பிறப்பித்திருக்கிறார்கள் பாகிஸ்தானில்! நாடுகடத்தல், சிறைப்பிடித்தல், சங்கங்களைக் கலைத்தல், செய்திகளைப் பிரசுரிப்பதற்கு முன்பு தணிக்கை செய்தல், ஆகிய பிரிவுகள் அடங்கிய ஒரு அவசரச் சட்டத்தை, நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரால், ஆளவந்தாாகள் பெறறெடுத்திருக்கிறாாகள். ஓராண்டு இதற்கு உயிா இருக்குமாம். மேலும் கூட உயிா கொடுக்கச் சட்டத்தில் ஏறபாடு இருக்கிறதாம!

பாகிஸ்தான் பேனல் கோடிலும், சில திருத்தங்கள் செய்யபபட்டிருக்கிறதாம். புதிய அவசரச் சட்ட விதிகளை மீறுகிறவாகளுக்கு, மூன்று வருஷம் வரை காவல் தண்டனையும, அபராதமும, அல்லது இரண்டும் தரபபடுகிற மாதிரியில பேனல கோட் திருத்தப்பட்டு இருக்கிறதாம! சபாஷ் ஆளவந்தார்களே! மேலும் பல அடக்கு முறைகளை இயற்றி ஆளவந்தார்கள்நிலைபைக் காப்பாற்றிக் கொள்வீாகளாக!

## அமைதி காக்க அமெரிக்காவின் செலவு!

இரண்டாவது உலகப்போர் முடிந்து அமைதி ஏற்பட்ட பிறகு—1946, 1947, 1948, 1949 ஆகிய நானகு ஆணடுகளிலே—அமெரிகக அரசாங்கம 17 700 கோடி டாலர்களைச் செலவழித்திருக்கிறது.

1789-வது ஆண்டில் ஜார்ஜ் வாஷிங்டன முதன் முதலாக அமெரிககாவின சுதநதர ஆட்சியைத் துவககிவைத்த காலத்திலிருந்து, 1940-ல் இரண்டாவது உலகப் போருககுரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிய காலம்வரை-152 ஆணடுகளில, அமெரிகக அரசாங்கம 16,700 கோடி டாலர்களைத்தான செலவழித்திருககின்றது.

அதாவது. அமெரிக்காவின் ஒன்றரை நூற்றாண்டுக்கால வாழ்விலே அது செலவிட்டிருக்கும் தொகையானது, 2-வது உலகப் போரை அடுத்துவநத 4 ஆண்டுகளில் செலவிட்டிருககும தொகையை விட 1000 கோடி டாலர் குறைவாகவே இருககிறது

இவ்வண்ணம குறைவாகச் செலவழிககப்பட்ட அந்த 150 வருடங்களும அமெரிக்காவின வரலாற்றிலே அமைதியாகவே கழிநதுவிட்டனவாவென ஆராயின்; அந்த ஒன்றரை நூற்றாண்டுக காலததிற்குள், 4 மாபெரும் போர்கள் நடைபெறறிருக்கின்றன. பன்முறை நாட்டிலே மந்த வாழ்க்கைநிலை ஏற்பட்டிருககினறன, புதிய அமைப்புததிட்டம் ஏழாண்டுகள்வரை நடைபெற்றிருக்கிறது. இவ்வளவிலிருந்தும இப்போதைய நான்காணடுகளில ஆன செலவைவிட, அந்த 1½ நூற்றாண்டுகளில ஆகியிருககும செலவு 1000 கோடி டாலர் குறைவாக இருக்கிறது.

அமைதிக்குரிய காலமென மதிக்கப்படும் இக்காலத்திலே—1949-ல் ஒரே ஒருமாதததில மட்டும, அமெரிக்க அரசாங்கம் 335 கோடி டாலர்களைச செலவழித்திருககிறது. அதாவது அமெரிககாவில நான்குவருட காலம் நடந்த உள்நாட்டுப் போருக்குக்காக அமெரிகக அரசாங்கம எவ்வளவு தொகை செலவிடவேண்டி வநததோ அந்த அளவுத்தொகையை இநத ஆணடில ஒரே மாதத்தில் அமெரிக்க அரசாஙகம செலவிட்டிருக்கிறது.

முதல் உலகப்போர் நடைபெற்றபோது, அமெரிககா அதில் பங்கெடுத்துககொணட இரணடு ஆண்டுகளுக்குரிய செலவு 3100 கோடி டாலர்களாகும். ஆனால் அமைதிக்குரிய இநதக காலததில, அந்த இரண்டாணடுகளில் ஏற்பட்ட போர்ச்செலவுத் தொகையைவிட அதிகமான தொகை மாதநதோறும செலவழிக்கப்பட்டு வருகிறது.

ஜூன் 30-ந்தேதியோடு முடிவடைந்த ஓர் ஆண்டில், அமெரிக்க அரசாஙகம செலவிட்டிருககும் தொகையானது, 2-வது உலகபபோருககு முன்னால, ஏற்பட்ட அமெரிக்கபபோர்கள அனைததிறகும ஆகியுள்ள மொத்தச் செலவுகளைவிட அதிகமாக மிஞ்சிவிட்டிருக்கிறது.

2—வது உலகப்போருககு முன் 60 லட்சம டாலர் முதல் 900 கோடி டாலாவரை செலவாகிக்கொண்டிருநதது. நான்காவது அமைதிககுரிய ஆண்டிலே அச்செலவு 4000 கோடி டாலராக உயாநது விட்டது.

# மாலை மணி

சென்னை 12—10—49 புதன்கிழமை


## நீதி கிடைத்தது

மக்களின் உரிமைகளை அடுத்து அடுத்துப் பறிக்கும் முறையில், முக்கியமானதாகவும், முழுமை வாய்ந்ததாகவும், இருக்கும்படி, சென்னை கவர்னரால் அண்மையில் விதிக்கப்பட்ட அவசரச் சட்டம், செல்லுபடியாகாது என்று, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் இருவர் தீர்ப்புக் கூறிவிட்டனர்.

முன்பு சட்டசபையால் நிறைவேற்றப்பட்டு, அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பொதுஜன பாதுகாப்பு அமைதிச் சட்டத்தில், 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுக்கள் மூலம் நீதி கேட்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அப்படி நீதி கேட்கும் முறைக்குச் சட்டத்தில் இடம் இருப்பது கண்டு, அதைச் சட்டத்தில் ஏற்பட்ட 'ஓட்டை' என்று கருதினார் 'காருண்ய' மிகுந்த சென்னை கவர்னர்! அந்த ஓட்டையையும் அடைக்க—அந்த ஒரு உரிமையையும் பறிக்க அவசரச் சட்டத்தின் துணையை நாடினார் அவர்! அது எந்த அளவுக்குச் சென்று பாயும் என்பதை அறிந்தோ, அறியாமலோ செலுத்தினர்! நீதி பறிபோகிறதே என்று ஓலகொலி எழுப்பினோம்! நீதிமன்றத்திலே நீதி கிடைக்குமோ, கிடைக்காதோ என்று ஏங்கினர் அவசரச் சட்டத்தால் உரிமையைப் பறிகொடுத்தோர்! இப்பொழுது நீதி கிடைத்துவிட்டது!

27 காவற் கைதிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்கள் சம்பந்தமாக அவர்கள் வழக்கறிஞர்கள் எழுப்பிய எதிர் வழக்காடலின் பேரில், நீதிபதிகள் பி. சத்யநாராயணாவும், பஷீர் அகமது ஸையதும் தீர்ப்பு வழங்கும்போது, பொதுஜன பாதுகாப்புச் சட்டம், 1948 மார்ச் 12-ம் நாள் செத்துவிட்டதாகவும், இதற்குப் பிறகு அமுலில் இருக்கக் காலாவதி ஆகிவிட்டதாகவும், ஓர் அறிக்கையின் மூலம் இச்சட்டத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பது செல்லாது என்றும் தீர்ப்பளித்துள்ளனர்.

1949 சென்னை பொதுஜன பாதுகாப்பு அவசரச் சட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், 3 (பி.) ஷரத்து நீங்கலாக, மற்ற எல்லா ஷரத்துக்களும் செல்லத்தக்கன அல்ல என நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர். உரிமை பறிக்கப்பட்டு, நிரபராதிகளாக நின்றோருக்கு இப்பொழுது நீதி கிடைத்துவிட்டது!

தள்ளப்படாத ஷரத்தான, 3 (பி) பிரிவு, 1948 மார்ச் 12-ம் நாள் அன்றோ அல்லது அதற்குப்பிறகோ, குறிப்பிடப்பட்ட சட்டத்தின் ஷரத்துகள் கீழ் எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும், அப்பொழுது அச்சட்டம் அமுலில் இல்லை என்றகாரணத்திற்காக எதிர் வழக்காட முடியாது என்பதைக் குறிப்பதாகும். கவர்னருக்குச் சட்டம் முதலில் அளித்துள்ள அதிகாரத்தையொட்டி, இந்த ஷரத்து இருப்பதால், அதை நிராகரிப்பதற்கில்லை என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை மாற்றவும், திருத்தவும், நிறைவேற்றவும் ஆன உரிமைகள் சட்டசபைக்கே உரித்தானதொரு உரிமையானபடியால், கவர்னர் போட்ட அவசரச் சட்டம் செல்லுபடியாகாது என்று பொதுப்படையான தீர்ப்பை நீதிபதிகள் வழங்கியுள்ளனர். இந்தத் தீர்ப்பின் அடிப்படையின் மீதுதான், ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்கள் நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகின்றன.

கேட்ட அளவுக்கு இப்பொழுது நீதி வழங்கப்பட்டுள்ளது. வேண்டிய அளவுக்கு நீதி வழங்கப்பட்டதா, என்றால், இல்லை! வேண்டிய அளவு நீதி பெற வழியுண்டா, என்றால், அதுதான் இல்லை!—சட்ட வழி மறுத்துக் கிடக்கிறது! நீதி தேவையான அளவுக்குக்கிடைக்கும் என்று எதிர்பார்க்கவாவது செய்யலாமா, என்றால், அந்த நம்பிக்கைதான் ஐயப்பாட்டிற்குள்ளானதாயிற்றே. காங்கிரஸ் ஆட்சியில்!

நிலைமை இந்த அளவோடு நின்றுவிடும் என்றுகூட எண்ணுவதற்கில்லை. உரிமை பறிக்கும் 'வேட்டை'யில் புகுந்துள்ள சென்னை அரசாங்கம், எப்படி இந்த அளவோடு நிறுத்திக் கொள்ள விரும்பும்! அத்தகைய பண்பை எதிர்பார்ப்பதற்கு அடிப்படையேதுதான் எதுவும் காணோமே!

கவர்னரின் 'வேட்டை'யிலே விழாததைச் சட்டசபை 'வேட்டை'யாடி வீழ்த்தப் பார்க்கும் என்பதை, காங்கிரஸ் ஆளவந்தார்களின் அன்றாட நடவடிக்கையிலிருந்து இனிது அறிந்துகொள்ளலாம்.

அமுல் நடத்துவதற்கு இயலாத முறையில்வைக்கப்பட்டுவிட்ட, கவர்னரின் அவசரச் சட்ட ஷரத்துக்களை முறைப்படி அமுலுக்குக் கொண்டுவர, இனிமேல் கூடும் சென்னை சட்டசபை முயன்றாலும் முயலக்கூடும். முயலாது என்று கூறுவதற்குக் காரணம் எதுவும் அகப்படவில்லை. ஆளவந்தார்களின் எண்ணப்படி, பாதுகாப்புச் சட்டத்திலுள்ள "குறைபாடுகள்", சட்டத்திருத்த மசோதா ஒன்றினால் நீக்கச் சட்டசபையில் வழி தேடப்படுமானால், 'பொது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே' சட்டசபை புகுந்துள்ள 'தலையாட்டிகள்' நிச்சயம் அதற்கு ஆதரவு தருவார்கள் என்பதில் ஐயமில்லை!

நீதி இப்பொழுதுகிடைத்துவிட்டது! அந்த வழி இனி எப்பொழுது, எப்படி அடைக்கப்படப்போகிறதோ இந்த ஆளவந்தார்களால்! அறியோம் 'பராபரமே'!

## வழிப் பிள்ளையாருக்குக் கடைத் தேங்காய்!

— —

கனடா நாட்டிலே தலைமை நீதிபதிக்கு மாதச் சம்பளம் ரூ. 4584. தென் ஆப்ரிக்காவில் ரூ. 3892. ஆஸ்ட்ரேலியாவில் ரூ. 3750. பிற சாதாரண நீதிபதிகளுக்குக் கனடாவில் ரூ. 3662—ம், தென் ஆப்ரிக்காவில் ரூ. 3611—ம்; ஆஸ்ட்ரேலியாவில் ரூ. 3333—ம் அளிக்கப்படுகின்றன.

நெடுங் காலமாகச் சுதந்தர வாழ்வும், வளமும், உலக வாணிபமும் பெற்றுள்ள அந்தச் செழுமைமிக்க நாடுகளிலே நீதிபதிகள் பெறும் சம்பள அளவு மேலே குறிப்பிட்டிருப்பதாகும்.

ஆனால், சம்பளங்களை மிகவும் குறைத்துக் கொள்ளப்போவதாகவும், நாட்டு நலன் ஒன்றைத் தவிர வேறு எதையும் கருதப்போவதில்லை என்றும் கூறிவந்த பெரும் தியாகிகள் ஆட்சி நடத்தும் இந்தியாவிலே, பிரதம நீதிபதிக்கு மாதச் சம்பளம் ரூ. 5000-மும், மற்ற நீதிபதிகளுக்கு ரூ 4500 ம் என முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஏழைகளின் நன்மைக்காகவே, பொதுமக்களுடைய முன்னேற்றம் கருதியே ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பதாகக் கூறும் பெரும் தியாகிகள் செய்திருக்கும் முடிவுதான் இது. வளம் பொருந்திய மற்றச் சுதந்திர நாடுகளைவிட அதிகமான பணத்தை மாதச் சம்பளத்தின் பெயரால் ஒரு சில உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் அளித்து அவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்தி வைக்கும் வேலையைச் செய்ய முன் வந்திருக்கும் இந்தத் தியாகிகள், இந்த நாட்டின் பெருவாரியான ஏழைத் தொழிலாளரின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த ஒரு நிமிடமேனும் சிந்தித்ததுண்டா? அவர்களுடைய கூலி விகிதங்களை உயர்த்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதா? மத்திய நகர மக்களின் நிலையை உயர்த்த ஏதேனும் வழி செய்யப்பட்டதா? உழவர்களின் நிலையை உயர்த்த முயலப்பட்டதா? பள்ளி ஆசிரியர்களின் அவல வாழ்க்கையை அகற்றி, உதவி செய்ய முற்பட்டதா? எதற்கெடுத்தாலும் பண முடையைக் காரணம் காட்டும் இந்திய அரசாங்கத்தினர், உத்தியோகஸ்தர்களும் சிலருக்கு மட்டும் பெருவாரியான சம்பளத்தைக் கொடுத்து, கொழுக்க வைத்து, மற்றப் பெரும்பான்மை மக்களை என்றுமே வறுமையில் ஆழ்த்தி வைக்கும் வேலையைச் செய்வானேன்? இப்படிச் செய்வதுதான் தியாகிகள் நடத்தும் ஆட்சிப் பண்போ! அகில உலகப் புகழ் வாய்ந்த தலைவர்கள் நடத்தும் நேர்மைக்குரிய அரசியல் முறை இப்படித்தானிருக்குமென்றால், காங்கிரஸ்காரர்களின் போக்கும் ஆட்சி முறையும் எத்தகையவை என்பது மக்களுக்கு நன்கு விளங்கிவிட்டது. இத்தகைய முறைக்குத்தான் தியாகிகள் ஆட்சிப்பொறுப் பேற்றனரெனின் இந்தத் தியாகிகளை விடச் சுயநலமிகளே மேல் என்னலாமே!

## உலகக்கூடம்

['சம்மட்டி']

### "ஈஸ்வர் இயேசு தேரே நாம்! ராமா கிருஷ்ணு தேரே நாம்!"

சத்கதா காலக்ஷேப வாச வேங்கிட வீரராகவ தாததேசிக தாதாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீ ஹனுமத்பிரபாவம், ஸ்ரீமந் கிருஷ்ணன் தூது முதலிய கதைகளைக், காலக்ஷேபம் செய்ய ஆரம்பித்துவிட்டால், வாயில் ஈ நுழைவதுகூடத் தெரியாமல், இமைமூடாமல், மூச்சுப் பேச்சு விடாமல், எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் ஆண் பெண் அடங்கலான வைஷ்ணவ பக்த கோடிகள், வாயைப் பிளந்து கொண்டு, சத்விஷயத்தை சிரவணம் செய்வது வழக்கம்.

காலக்ஷேபம் செய்து கொண்டே வரும்பொழுது, ஸ்ரீமந் இராமமூர்த்தி வில் வித்தை பழகும் கட்டம் வந்தால், தாதாச்சாரிய சுவாமிகள், அப்படியே நடித்துக்காட்டுவார்! அப்பொழுதுதான் இராமருக்கு, மற்றவர்களுக்கு இருப்பதைவிட, வயிறு கொஞ்சம் பெரிதாக இருந்தது என்பதை பக்தகோடிகள் தெரிந்து சந்தோஷப்பட முடிந்தது என்று, எங்களூர் பிரதிவாத பயங்கர மடத்தில் பேசிக்கொள்வார்கள்.

பாருங்கள்! ஒருமுறை—நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்—நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி. நான் கேள்விப்பட்டதைச் சொல்லித் தீர்த்து விடுகிறேன்—ஸ்ரீ ஹனுமான், இலங்கை மாநகரை அக்கினி பகவானுக்கு ஆவாகனம் செய்த ஸ்ரீ பகவத் கைங்கரியத்தை சாங்கோபாங்கமாகப் பிரசங்கித்தார். அக்னி சொரூபமாகி இருந்த குஞ்சம் ஒன்றுதானுங்க இல்லை பாகவதரவாளுக்கு; மற்ற தோற்றமெல்லாம்—முகம், நெற்றி, உதடு, எல்லாம் ஸ்ரீ ஹனுமான் மாதிரியே—மாதிரி என்ன—ஸ்ரீ ஹனுமானே அரங்கத்திற்கு எழுந்தருளிவிட்டார் என்று நம்பிக்கையாகச் சொல்லலாம்போல் இருந்துவிட்டது! ரவிவர்மா படத்தில பார்க்கிற ஹனுமந்தருக்கும், பாகவத சிரோமணி தாதாச்சாரிய சுவாமிக்கும் வேற்றுமை லவலேசமும் இல்லை!

இராமகாதை காலக்ஷேபம் நடக்கிற இடத்தில, கண்டிப்பாக ஒரு ஹனுமான் இனத்தவராவது வந்து, ஸ்ரீமந் ராமனின் பெருமையைக் கேட்டு ஆநந்திக்கும் என்று கர்ணபரம்பரையாகச் சொல்லிவருகிறார்கள். நானும்தான் எத்தனையோ முறை இராமாயண பிரசங்கம் நடக்கும் இடங்களுக்குப் போயிருக்கிறேன். ஒரு இடத்தில்கூட, கதை கேட்கவந்து உட்கார்ந்து கொண்டிருக்கிற குரங்கை—புத்தி புத்தி—ஹனுமாரைக் கண்டதில்லை. நீங்கள் யாராவது கண்டிருக்கிறீர்களோ என்னவோ, ஏதாவது நீங்கள் தெரிவித்திருந்தால் தானே, நான் தெரிந்து கொண்டு இருக்க முடியும்!

நேற்று முன் தினம், பிரஸ்தாப பாகவதர், 'ஸ்ரீமந் இராம பட்டாபிஷேகம்!' என்னும் விஷயமாக, வெகு வெகு விமரிசையாக, காலக்ஷேபம் செய்தார். பெரிய பட்டாபிஷேகப் படம், மலர்மாலை சாத்தப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படத்தையே பக்தி, விஸ்வாசத்தோடு பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்த வண்ணம் இருந்தோம்! இதற்குமேல் என்னவென்று சொல்வதுங்க!

திடீரென்று, எல்லோரும் பார்த்துக்கொண்டே இருக்கிற பொழுது—ஹா—ஹா—ஒரே வெடிச்சத்தம்கேட்டதுங்களங்க ளப்பேல வேபாகவதரும் பயந்துநடுநடுங்கிப்பூட்டாருங்கா ம நாமத்தைப் பஜித்தா 'காலன்' கூட நம்மகிட்ட அண்டமாட்டான் என்று சொல்லுகிறார்களே, முடியலிங்க அதாலேகூட, இந்தச் சப்தம் உண்டாக்கின அதிர்ச்சியிலிருந்து எங்களைக் காப்பாத்த!

இருந்தாப்போல இருந்து படம் வெடிச்சிதுங்களா, அதிலிருந்து ஒருவர் எழுந்து எங்களை நோக்கி நடந்து வர ஆரம்பிச்சுட்டார். சும்மா சத்தமில்லாமலும் நடந்து வாலிங்க! இரு கைகளிலும் வைத்திருந்த சப்ளா கட்டைகளால் சப்தத்தை எழுப்பிக் கொண்டு, திருநாமம் தீட்டிய நெற்றியோடு, மார்பு, வயிறு எங்கும் கம கமவென மணம் வீசும் சந்தனப்பூச்சும், பொலியணி மார்பில் பொங்க வெண்ணூலும் பூண்டு,

**ஈஸ்வர் இயேசு தேரே நாம்!**

**ராமா கிருஷ்ணு தேரே நாம்!**

என்று வாய் நிறைய பஜித்துக் கொண்டு, இருவிழிகளும் நீர் பெருக்க, தம்மைத் தாமே சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டு இருந்தார்!

இது கண்டு நாங்களும் திரு திரு என்று விழித்தோம்! பாகவதரும் விழித்தார்! ஆனால் ஆரம்பத்தில் ஏற்பட்ட பயம் மட்டும் அடியோடு தொலைந்து போய் விட்டது! படத்தை உடைத்துவிட்டு கீழே குதித்த ராமபக்தர் யார்? இவ்வளவு பகவத்பக்திகொண்டு ராமநாமத்தைப் பஜிப்பவர் யார்? என்று தெரிந்து கொள்ள முடியாமல் நாங்கள் திக்பிரமை கொண்டு விட்டோம்! ஒருவரோடு ஒருவர், இதுபற்றியே குசு குசு வென்று பேசிக்கொண்டோம்!

இந்த நெருக்கடியான நிலையில், ஒரு பத்திரிகை நிருபர், எங்கள் திகைப்பைத் தீர்த்து வைத்தார். பண்டித நேரு அவர்கள் மைசூர் மகாராஜாவின் பரிசாக, அமெரிக்க நாட்டுத் தலைவர் ட்ரூமனுக்கு எடுத்துச் செல்லும் அழகிய தந்தப் பெட்டியில், இராமாயண பாரதக் கருத்துக்களில் சில வரையப்பட்டிருக்கின்றனவாம்! அதனைப் படித்துவிட்ட ட்ரூமன், நமது நாட்டுப் பஜனை மடம் தேடி விஜயம்செய்து விட்டிருக்க வேண்டுமென்று கூறினார் நிருபர்!

# 'இந்தா விபீஷணா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டதாகமயக்கம்கொள்ளவும். சம்பவத்தில் மறைந்து கிடக்கும் மறுக்க முடியாத உண்மைகளை ஆராய்ந்து அறிய மறக்கவுமான நிலை, இந்தப் பலனற்றச் சிறுபூரிப்பிலே இருக்கத்தான் இருக்கும்! மின்னல் வெளிச்சத்தால், பாதை கண்ணுக்குத் தெரியலாமே யன்றி, பாதை வழியே தொடர்ந்து செல்லமுடியாதே! மின்னல் வெளிச்சத்தைக் கண்ட கண்கள், மறுபடியும், தன்னிலையைப்பெற பல நிமிஷம் ஆகும் என்ற அனுபவத்தையும் மறந்துவிடுவது மனிதப் பண்பாகாது!

பண்டித ஜவஹர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த இணையற்ற வீரர் என்ற நிலைமட்டும் இருக்கவில்லை. ஒரு பெரிய துணைக்கண்டத்தின், ஒரு ஒழுங்கான சட்டத்தினால ஏற்படுத்தப்பட்டுள்ள (Head of the State) அரசின் தனித்தலைவர் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த நிலையில் இருக்கும் ஒருவரின், எந்தச் செயலையும், சீர்தூக்கிப் பார்க்கவும், குறையிருந்தால் எடுத்துக்கூறவும், நல்லதிருந்தால் ஆதரவு காட்டவும், நமக்குமட்டுமல்ல—எந்த ஒரு பிரஜைக்கும் உரிமை உண்டு நாம் சீர்தூக்கிப் பார்க்கும் பண்டிதர் இத்துணைக்கண்டத்தின் பிரதமர்; வெறும் 'ஆசியாவின் ஜோதி' என்று சிறப்பிக்கப்படும் மோதிலாலின் திருமகனா அல்ல—அல்ல!

தற்கால வரலாற்றிலே, எந்த ஒரு நாட்டின் ஆட்சித் தலைவரும், இப்படிப் பிறநாட்டில், தனக்கு இயல்பாக இருக்கும் புதிய அனுபவம் பெறும் விருப்பத்திற்காக, பொழுதுபோக்கினதில்லை. இன்னும் சொல்ல வேண்டுமானால், நாற்பத்தெட்டு மணி நேரங்களுக்குமேல் வெளிநாட்டில் களியாட்டத்தில் மூழ்கியும் இருந்ததில்லை மக்களாட்சிமுறை நுணுக்கம் தெரிந்தவர்களுக்கே இது - மகேஸ்வர பூஜைக்காரர்களுக்கு அல்லவே அல்ல!

குறிப்பிட்ட திட்டம், இலட்சியம், குறிக்கோள், ஏதாவது இருக்கிறதா, நமது பிரதமரின் திக்விஜயத்தில்! அப்படி ஒன்றும் கிடையாது! ஆனால் புதிய அனுபவம் பெறும் அவருக்குள்ள ஆசை இருக்கிறது!

ஐந்தாறுபக்கம் அச்செழுத்துக்களால் பொறித்து, பண்டிதர் புரியப்போகும் பணி அட்டவணை இருக்கிறது திறக்கிறார்-பேசுகிறார்-வரவேற்புக்குப் பதில் கூறுகிறார்—டாக்டர் விருது பெறப்போகிறார் — ட்ரூமனோடு விருந்துண்ணப் போகிறார்—வேடிக்கையிலே மூழ்கப்போகிறார்—விதவிதமானத் துறையிலிருப்பவர்களை முகமறிந்துக்கொள்ளப் போகிறார்—நமது நாட்டுப் பிரதமர் பண்டித ஜவஹர்! நமக்கு, இது, துன்பப்பட்ட நெஞ்சுக்கு ஆறுதல்பெற-அதுவும் சிலநிமிஷம்—உதவலாமேயன்றி, பிரதமர்புரியும் இப்பணியினால், நமது துன்பத்தைத் துடைத்துக்கொள்ளத் திரும்பளவாவது பயன் படுமா? சிந்தனையாளர்களே. சிந்தித்துத் தீர்ப்பளியுங்கள்! தீர்ப்பளிக்க வேண்டாம், உங்களுக்குள்ளே தெளிவு பெறுங்கள்!

உலகத்தில் இரு அணிகள் அமைந்துள்ளன. ஒன்றுக்கு அமெரிக்காவும், மற்றொன்றுக்கு ரஷ்யாவும் தலைமைத் தாங்கிக்கொண்டு இருக்கின்றன. இவ்விரண்டில், எந்த ஒன்றுடனும் சேர்ந்துகொள்ளாமல்நடுநிலைவகித்து, உலகில் அமைதியை நிலைநாட்டப் போவதாக, இத்துணைக் கண்டத்தின் வெளிநாட்டுக் கொள்கையை எத்தனைமுறை, நமது பிரதமர் விளக்கிவந்துள்ளார். இக்கருத்துக்கு கோட்பாட்டிற்கு—அமெரிக்காவில் அரசாங்க விருந்தினராக மூன்று கிழமை நமது பிரதமர் தங்கி வேடிக்கையில் காலம் கழித்துவருவது, அரண் செய்யுமா என்பதை அறிஞர்கள். அவசியமென்று பட்டால் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். நமது நடுநிலைமைக்கொள்கைக்கு, இது. நல்லதோர் எடுத்துக்காட்டாகுமா என்பதும் சிந்திக்கத்தக்க விஷயமாகும்.

நமது பிரதமருக்கு, அமெரிக்கா அளிக்கும் ஆடம்பர உபசாரத்திலே, அமெரிக்காவின் விருந்தோம்பும் பண்பு-வேளாண்மைப் பெருநெறி—தவிர்த்து வேறு விஷமம் இல்லை என்று எவரும் கூறத் துணியார் 'ஆசியாவின் ஜோதி' 'ஆசியாவின் தலைமை' என்ற புகழ் இத்துணைக்கண்டத்திற்குக் கிடைக்கும் என்பதில்ஆச்சரியம் ஒன்றுமில்லை! அமெரிக்கா நமக்களிக்கும் அந்தப்புகழும், நமது பிரதமர் அதற்காகக் கொண்டிருக்கும் ஆசையும் மகிழ்ச்சியூட்டக்கூடியதாகத் தோற்றமளித்தாலும், அதில் மறைந்து கிடக்கும் 'ஆபத்தை' நினைக்கும்பொழுது, நமக்கு அச்சமே பிறக்கிறது.

விபீஷணன் இலங்கை அரசைப், பணியெதுவும் புரியாமல் பெறவில்லை. அண்ணனை மறந்ததின் பயன்தான் பதவி! பண்டித ஜவஹர், இத்துணைக்கண்டத்திற்கு "ஆசியாவின் தலைமை' பீடத்தைத் தேடித்தருவதற்கும், எதையாவது பணயம் வைத்தாக வேண்டும். முன்கை நீண்டாலதான் முழங்கை நீளும்! என்ன அது? கண்ணீர் பெருக்க வேண்டாம்! கேடுகளைய முயலுங்கள்!

## முத்திராதானம்!

★

பர்மாவிலுள்ள இந்தியர்கள் தங்களைப் பர்மியப் பிரஜைகளாகவோ அல்லது இந்தியப் பிரஜைகளாகவோ செப்டம்பர் 30-ந் தேதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும். இக்குறித்த காலத்தில், அங்குள்ள 2,50,000 இந்தியர்களில் 1,50,000 பேர்களுக்கு மேல் பதிவு செய்துகொண்டு இருக்கிறார்கள்.

## ஏஜெண்டுகளுக்கு

அதிகப்படி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம் அனுப்பினாலன்றி கவனிக்கப்படமாட்டாது.

—"நிர்வாகி"

## இனி நடப்பவை

வாணியம்பாடி—இந் நகரிலும், சுற்று வட்டாரக் கிராமங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் அமைக்கும்பொருட்டு 14—10—49 வெள்ளி மாலை 5-மணிக்குத் தோழர் டி. ஏ. ஆறுமுகம் அவர்களுடைய (எண் 256 நாஸ்காரத் தெரு, நியூடவுன்) இல்லத்தில் ஓர் அமைப்புக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக ஆதரவாளர்களனைவரும் கலந்துகொள்ளும்படித் தோழர்கள் முலலைச்கொமபை, எம். பி. வடிவேலு சாமிநாதன், வி. என். தாதப்பன் ஆகியோர் வேண்டிக்கொள்கிறார்கள்.

* * *

கல்லுப்பட்டி—பெரியகுளம் வட்டம் ஜி. கல்லுப்பட்டியில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 14—10—49 வெள்ளி இரவு 9-மணிக்கு தோழர் அ. வீ. ப. கார்த்திகேயன் அவர்கள் தையல் நிலயத்தில் நடைபெறும் அவ்வமயம், திராவிடர் கழக உறுப்பினர்களும், இயக்கத் தோழர்களும் வருமாறுத் தோழர் பெ. நடராசன் அழைக்கிறார்.

* * *

திருத்தங்கல்— இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 16—10—49 ஞாயிறு மாலை 4-மணிக்கு "கஸ்தூரி விலாஸ் சீயக்காய் கம்பெனி'யில் நடைபெறும். எனவே, இயக்கத் தோழர்கள் அனைவரும் தவறாது வந்து கலந்துகொள்ளும்படித் தோழர் செ.வெ. செண்பகமூர்த்தி (தி. மு. க. அமைப்பாளர்) வேண்டுகிறார்.

* * *

திருச்சி—திருச்சி மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத் தற்காலிகக் கிளை அமைப்புக் கூட்டம், 16-10-49 காலை 10-மணிக்கு தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் தலைமையில் "அருணகிரி பார்க்'கில் நடைபெறும். அவ்வமயம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்ட (தாலுகா) கழகங்களிலிருந்து 3 உறுப்பினர்களைத்தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்கும்படித் தோழர் எஸ். நெடுமாறன் (திருச்சி நகர தி. மு. க. விளம்பர உறுப்பினர்) கோருகிறார்.

* * *

குகை (சேலம்)—சேலம் குகை திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 14—10—49 வெள்ளி இரவு 8-மணிக்கு திருச்சி ரோட்டிலுள்ள தேவன் பிச்சாஸ் 170 எண்ணுள்ள கட்டிடத்தில நடைபெறும். அதுபோது, தி. மு. கழக அனுதாபிகளனைவரும் கலந்துகொள்ளும்படித் தோழர், பி. வெங்கட்ராமன் வேண்டுகிறார்.

## அண்ணா அறிவு மன்றம்

மேலச்சின்னணம்பட்டி (மதுரை) அக் 1.—

அண்ணா அறிவு மன்றத்தின் உறுப்பினர்கள் கூட்டம் ஒன்று கூடி அடியிற்கண்டபடி செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- பழனிச்சாமி; துணைச்செயலாளர்- கு. தங்கையா; பொருள உறுப்பினர்- வே. சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்- ப. சுப்பிரமணியம். ஏனைய செயற்குழுவினர்- ந. கந்தசாமி, கா. ந ராஜன், ராஜாங்கம், சொ. அழகர்சாமி, சு. சின்னணன்.

17-9-49 ல் சென்னையில் தீர்மானிக்கப்பட்டபடி நடப்பதென்றும், கூடிய விரைவில் தி. மு. கழக கொடியை ஏற்றுவிப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் ப. சுப்பிரமணியன (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

# மக்கள் நலன் காக்கப் போதிய மருத்துவர் இல்லை

பொதுநலத்துறை அமைச்சர் டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன் அண்மையில் சிதம்பரத்தில் நான்காவது இந்திய மாகாண மருத்துவ மாநாட்டில் பேசியபோது,

"சென்னை மாநிலத்தில் மொத்தம் 8507 ஆங்கிலத்துறை மருத்துவர்களும், 16 108 இந்தியத்துறை மருத்துவர்களும் இருக்கின்றனர். மக்கள் தொகையோ 5 கோடியே 24 லட்சமாகப் பெருகிவிட்டிருக்கிறது. இவ்வண்ணம் பெருகிய மக்கள் தொகையைக் கணக்கிடும் போது, இந்த அளவு மருத்துவர் தொகை மிகமிகக் குறைவானதாகும். அதாவது, இப்போதுள்ள கணக்குப்படி, 2000 மக்களுக்கு ஒரு மருத்துவர் விகிதமாகிறது."

என்று கூறினார். நம் நாட்டிலே போதாது என்று குறைஉறக் கூடிய இனங்கள் ஒன்று இரண்டல்ல. பலப்பல. அவற்றுள் சிறப்பாகக் கவனிக்க வேண்டியவை உணவு, உடை, உறையுள், உடல்நலம் என்பவைகளே.

இன்று நாட்டிலே உணவுப் பிரச்சினை இருக்கும் வகையில் நல்ல உடல் உரம வாய்ந்தவனும விரைவில் நலமிழந்து; உரங்குன்றி நோயாளியாவான். மக்கள் தெரு ஓரங்களிலும் சாக்கடை ஓரங்களிலும் வாழவிட்டிருப்பதும், காற்றோட்டமில்லா வீடுகளில் மந்தை மந்தையாகக் குடியிருப்பவர்கள் பற்றிய அக்கரை எடுத்துக்கொள்ளாமலிருப்பதும் பலவகைப் புதிய நோய்கள் கிளம்பவும், தொத்து நோய்கள் எளிதில் பரவவும் இடமளிப்பதாக இருக்கின்றது. இவற்றை யெல்லாம் கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது; சென்னை நகரசபை; ஜில்லா போர்டுகள்; முனிசிபாலிட்டிகள்முதலியவற்றினுடையது. ஆனால், இந்த ஸ்தலஸ்தாபனங்கள் பணம் இல்லை என்ற பாட்டைப்பாடி, சென்னை, அரசாங்கம் உதவி செய்ய வில்லை என்று அரசாங்கத்தின் மீது பழி போடுகின்றன. அரசாங்கமும் பணமில்லை என்ற அதே பாட்டைப் பாடிக் கையை விரிக்கிறது.

இந்நிலையில் நம்நாட்டு மக்களின் தொகைக்குப் போதுமான அளவு மருத்துவர்களுமில்லை. இருக்கும் மருத்துவர்களிலேயே பலர் பொறுப்பற்றவர்களாகவும் திறமை அற்றவர்களாகவும இருக்கின்றனர். பல ஆஸ்பத்திரிகளில் பொறுப்புடனும அக்கரையுடனும நடந்துகொள்ளத் தெரியாத மருத்துவர்கள் பலருளர். எனவே, பொறுப்பும திறமையும், சிறப்பான பயிற்சியும், அக்கரையும் உள்ள மருத்துவர்கள் இன்னும் பலர் நமநாட்டிற்கு இன்றியமையாது தேவைப்படுகின்றனர்.

இவர்களைப் பயிற்றுவிக்க இப்போதுள்ள மருத்துவக் கல்லூரிகள போதா. மேலும் பல மருத்துவக் கல்லூரிகள் தேவைப்படுகின்றன. மருத்துவக் கல்லூரிகள் அமைக்கவோ பெரும் பொருட் செலவு ஏற்படும். அரசாங்கம் எப்படிச் செலவு செய்ய முன்வரும் இத்துறையில்? எனவே, பொதுநலத்துறை அமைச்சர், மேடைமீது பேசுவதுடன் சரி. பேசியபடி பல மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தப் பொருட்செலவிட முன்வர முடியாது. ஏனெனில அரசாங்கத்திடம பணமில்லை இதற்குப் பேசுவானேன்? இதற்கெனப் பொதுநலத்துறை ஒன்றும், அதற்கோர் அமைச்சரும் இருப்பானேன்?

உண்மையில் பணமில்லையா? புதிய மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு மட்டுமன்று; மற்றும் பல மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்கவும பணம் கிடைக்குமே! கோயில்களில் திரண்டு கிடக்கும் பணத்தை மக்களுடைய கல்வி வளர்ச்சிக்கும், நாட்டின் உணவுப் பொருள் பெருக்கத்திற்கும், மருத்துவத்துறை, விஞ்ஞானத்துறை, பொறிஇயல் (இஞ்சினியரிங்) முதலியவற்றிற்காகச் செலவிட ஏன் அரசாங்கம் முனைதல் கூடாது? கடவுள் பணிக்கென முன்னையோர் வைத்துவிட்டுச் சென்ற செல்வம நடமாடும் கோயில்களாகிய மக்கள் பணிக்கெனச் செலவிடுவதில் தவறு என்ன? அரசாங்கம் சிந்திக்குமா?

நாட்டின் நிலைமை உயரும் வரையில், நாட்டுமக்கள் அனைவரும் கல்வி, உணவு, உடை, உறையுள், உடல்நலம், உறம் முதலியவற்றைத் தக்கபடி பெறும் வரையில் கோயில்களில் நித்திய பூசைகள் தவிர, பிற திருவிழாக்கள் போன்ற ஆடம்பரங்கள் அனைத்தையும நிறுத்தி வைத்து, அசசெலவுகளுக்குரிய பணத்தை எல்லாம் மக்கட்பணிக்கெனச் செலவிடலாம் அல்லவா? அரசாங்கம இத்துறையில் கருத்தூன்றுமா? துணிவிருக்கிறதா செயலாற்ற! வெறும் பேச்சில் பலன் விளைந்துவிடாது. அரசாங்கம செயலாற்ற முன்வரவேண்டும்.

## பிறப்பு

பாலிடப்பட்டு, அக். 7—

இவ்வூர் தி. மு. கழகத் தோழர் கோவிந்தசாமி அவர்களின் துணைவியார் தோழியர், சுப்பு அம்மையாருக்குப் பிறந்த பெண் மகவுக்கு இன்று "மணிமேகலை" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். மகிழ்ச்சி [ஆ—ர்]

* * *

திண்டுக்கல், அக். 4—

இவ்வூர் பகுத்தறிவுப் பணி மனை உரிமையாளரும, தி. மு. கழகத் தோழருமான எஸ். பி. தாண்டவம் அவர்களின் துணைவியார் தோழியர் மணிஅம்மைக்கும் 30—9—49ல் பிறந்த ஆண்மகவுக்கு "கலைமணி" எனப் பெயர்சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ—ர்]

* * *

செயங்கொண்டம், அக். 4—

இவ்வூர்த் தோழர் எம். வேணுகோபால அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பாப்பு அம்மையாருக்கு 25—9—49ல் பிறந்த ஆண்குழந்தைக்கு "செல்வம்" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம், மகிழ்ச்சி! [ஆ-ர்]

* * *

கம்பம், அக். 3—

இவ்வூர் தி. மு. கழகத் தோழர், வி. வணணமுத்து அவர்களுக்கும், தோழியர், சுருளியம்மாளுக்கும் 25-9-49 ல் பிறந்தகுழவிக்கு "கலைச்செல்வி" எனறு பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]

## வள்ளுவர் படிப்பகம்

அம்பாசமுத்திரம், செப். 27—

வள்ளுவர் நெறியைப் பரப்புவதற்கும், முன்னேற்றத்திற்கானப் பணிபுரிவதற்கும்இவ்வூரில "வள்ளுவர் படிப்பகம்" என்ற ஓர் படிப்பகம் திறக்கப்பட்டுள்ளது. தோழர் வி. சுப்பிரமணியம் தலைவராகவும், தோழர் சு நாராயணன் செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் எனத் தோழர் சண்முகம் (தி மு க. விளம்பர உறுப்பினர்) அறிவிக்கிறார்


## "மாலை மணி"

(திராவிடர் தமிழ்த் தினசரி)

| | |
|---|---|
| வருட சந்தா | 15—0—0 |
| 6 மாத " | 7—8—0 |
| 3 மாத " | 3—12-0 |

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### போடிநாயக்கனூர் திருமலாபுரம்—கிளை

திருமலாபுரம், அக்.4—

போடி நாயக்கனூர் திருமலாபுரம் திராவிடர் கழக முக்கியஸ்தர்கள் இன்று கூடி, டி கழகத்தைக் கலைத்துவிட்டுத், திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தனர். தோழர்கள் எம். என். இரத்தினம், எம். பெரியசாமி, எஸ். கே. அழகிரிசாமி, எஸ். எஸ். சண்முகம் ஆகியோர், தி. மு. கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்க இசைந்துள்ளனர். 16-10-49ல் தி. மு. கழக ஆரம்பவிழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கென ரூபாய் 25 நிதி சேர்க்கப்பட்டது. கீழ்கண்ட செயலுறுப்பினர்கள் 16—10—49 வரை வேலை செய்வார்கள் செயலாளர்:— எஸ். வி. கருப்பையா, விளம்பர உறுப்பினர்:—அ. அ. பரமசிவம். எனத் தோழர் அ. அ. பரமசிவம் (விளம்பர உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

### அறந்தாங்கி—கிளை

அறந்தாங்கி, அக். 7—

அறந்தாங்கி திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், இவ்வூர் ராஜன் சோடா பாக்டரியில் 5—10—49ல் கூடிற்று. தோழர் ப. நடராசன் தலைமை வகித்தார். "திராவிட முன்னேற்றக் கழகம்-அறந்தாங்கிக் கிளை" அமைக்கப்பட்டுப் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—ப. நடராசன்; பொருள் உறுப்பினர்; கனக. சுப்பிரமணியம். விளம்பர உறுப்பினர் :— கோ. வீரராகவன். ஏனைய செயற்குழுவினர்கள் :— எஸ். சிங்காரவேலு, து. சி. கோவிந்தராசன், சி. நாராயணசாமி, இரா. சுப்பையா. பின்பு அண்ணாவின் 17-9-49, 2-10-49 அறிக்கைகள் படித்துக்காட்டப்பட்டுக, கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

### புதுக்கோட்டை (நெல்லை) - கிளை

புதுக்கோட்டை (நெல்லை) அக். 5-

நெல்லை மாவட்டத்தைச்சேர்ந்த புதுக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 4-10-49 மாலை 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் எஸ். ஏ.நம்பி அவர்களின் தலைமையின் கீழ்நடைபெற்றது. கீழ்க் கண்டவாறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

(1) "பெரியார் பகுத்தறிவு திராவிடர் கழகம்" என்பதை "திராவிட முன்னேற்றக்கழகம்" - புதுக்கோட்டை (நெல்லை) கிளை" என மாற்றி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(2) பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்தும், பொருந்தாத் திருமணத்தைத் தவிர்க்க வேண்டுமென கூறியவர்களைச் சதிகாரர்கள், குழ்ச்சிக்காரர்கள் எனத் தாக்கி அறிக்கைகள் விட்டதைக் கண்டித்தும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

(3) தலைமைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு முறைகள், சட்ட திட்டங்கள், கொள்கைகள், கொடி ஆகியவைகள் பற்றி முடிவு செய்தவைகளை ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப் பட்டது.

(4) புதிய செயற் குழு நிறுவதெனத் தீர்மானிக்கப்பட்டு செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்—இரா. சுப்பையா; பொருள் உறுப்பினர்- சி காசி; விளம்பர உறுப்பினர்- எஸ். நம்பி; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்- எஸ். ஆறுமுகம், எஸ். சாமுவேல், பி. எம். துரைராஜ், வி. பால்வண்ணன், ஏ. இராமசாமி, வி.குழந்தைசாமி. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

### எட்டயபுரம்—கிளை

நடுவிற்பட்டி, அக். 6—

5-10-49 இரவு 8-மணிக்கு எட்டயபுரம், நடுவிற்பட்டி குமரன் நிலயத்தில், திராவிடர் கழகத் தோழர்கள் கூட்டம்கூடியது. தோழர் கா. ராமசந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம்— எட்டயபுரம கிளை" அமைக்கப்பட்டது. முன்னேற்றக் கழக வேலை என்பது பற்றித் தோழர்கள் முத்து, நடராசன், முத்துசிவன் சுப்பிரமணியன், கலிங்கன் ஆகியவர்கள் பேசினர்கள். பின்னர் செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது

செயலாளர்- மு. வெற்றிவேல்; துணைச் செயலாளர்- மே. முத்து; பொருள் உறுப்பினர்- மு. சோலைக்கண்ணன்; விளம்பர உறுப்பினர்- தி. ராமசாமி. ஏனைய செயற்குழு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

### ராய நல்லூர்—கிளை

ராய நல்லூர், அக். 6—

திருத்துறைப்பூண்டி தாலுகா, ராய நல்லூரில், திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம் 5—10—49 இரவு 8மணிக்கு, இவ்வூர் தோழர் கா. மாணிக்கம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இதுவரை பெரியார் பகுத்தறிவுக் கழகம் என இருந்ததை, "திராவிட முன்னேற்றக்கழகம்—ராய நல்லூர் கிளை" என மாற்றப்பட்டு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வி. ராமையா; துணைச்செயலாளர்:—கா. மாணிக்கம்; நிதி உறுப்பினரும், விளம்பர உறுப்பினரும :— அ. விஜயபாஸ்கரன். ஏனைய செயற்குழுவினர்கள்:— ஆரோக்கியசாமி, ஞா. சந்தனம், கா. சேவு, ச. அருளாந்து சா. பாரிஜாதம.

பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக கூட்டம் இனிது முடிவுற்றது. எனத் தோழர் அ. விஜய பாஸ்கரன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

### கோபி—கிளை.

கோபி, அக். 6—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம், தோழர் வ. ராமன் அவர்கள் இல்லத்தில், 5-10-49ல் நடைபெற்றது. கூட்டத்தலைவர் தோழர் ஜி. என். இராஜு, தி. மு. கழக ஆக்கவேலைகள் குறித்துப்பேசியபின், "திராவிடமுன்னேற்றக் கழகம்—கோபி கிளை" அமைக்கப்பட்டுக, கீழ்க்கண்டவாறு செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ஜி.என். இராஜு; துணைசெயலாளர்:-வி.என். பழனிசாமி; நிதி உறுப்பினர்:—ஏ. சி. ராமன்; விளம்பர உறுப்பினர்:— எஸ். எம். ஷரீப். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—என். கே. யாகூப், கே.எம. அசன் முகம்மது, எஸ். எம. கிட்டு, ஜி. பி. ராமன், வி. பி. ராஜு. பின்பு செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் எஸ். எம. ஷரீப் (விளம்பர உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

### பெருந்துறை—கிளை

பெருந்துறை, அக். 7 —

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம, தோழர் த. கிருட்டிணன் தலைமையில 3-10-49 அன்று கூடியது. அவ்வமயம் தி. மு. கழகம் அமைக்கப்பட்டு பின்வரும் உறுப்பினர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- ப: சின்னமாராஜு; துணைச செயலாளர்- கி. தண்டபாணி; பொருள் உறுப்பினர்- க. மோதிலால்; விளம்பர உறுப்பினர்- யூசப். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— எம். சுலைமான், எஸ் மாரிமுத்து, எம். ஆறுமுகம், த. கிருட்டிணன், எம். பொன்னுசாமி, கன்னியப்பன். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றி நவிலலுடன் கூட்டம் முடிந்தது. எனத் தோழர் சி. பி. சின்னமராஜ் (செயலாளர்) தீட்டுகிறார்.

* * *

### ஏழாயிரம்பண்ணை—கிளை

ஏழாயிரம்பண்ணை, அக். 6—

இவ்வூரில் 5-10-49 புதனன்று, தோழா குருசாமி அவர்கள் கட்டிடத்தில், தோழர் ச. பழனியப்பன், பி. ஏ. தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகம்— ஏழாயிரம பண்ணை கிளை" நிறுவப்பட்டது. பினவருமாறு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- சி. ஆறுமுகசாமி; துணைச் செயலாளர்- தி. ராசமணி; பொருள் உறுப்பினர்- சொ. குருசாம; விளம்பர உறுப்பினர்- ஆ. கனிப்பாண்டியன். ஏனைய செயற்குழுனர்கள்: ச. பழனியப்பன் பி.ஏ, சி. துரைபாண்டியன், ரா. ரத்தினம். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் ஆ. கனிப்பாண்டியன் (வி. உறுப்பினர்) வரைகிறார்.

* * *

### சதுப்பேரி (வ. ஆ)—கிளை

சதுப்பேரி (வ. ஆ) அக். 6—

இவ்வூர் திராவிடர் கழகச செயற் குழுவினர்கள தி. மு. கழகக் கட்டிடத்தில் இன்று கூடி, திராவிடர் கழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றியமைத்தனர். கூட்டத்திற்குத் தோழர் வி.கே. பெருமாள் தலைமை வகித்தார். புதிய செயற்குழுவொன்று தெர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளா: — வி. கே. பெருமாள்; துணைச செயலாளர்:—எம. குப்புசாமி, நிதி உறுப்பினர் :— கோவிந்தசாமி, விளம்பர உறுப்பினர்கள்:—கே. கந்தசாமி, வி. கண்ணன். ஏனைய செயற் குழுவினர்கள:—எம். தண்டபாணி, எம. பொன்னுசாமி, வெ. அப்பு குட்டி, சின்னசாமி, கே. பெரியசாமி, வெள்ளை, பச்சியப்பன், கே. பெருமாள, ஆ. தங்கவேல், குப்பன. எனத் தோழர் வி. கே. பெருமாள (செயலாளர்) தெரிவிக்கிறார்.

* * *

### காங்கயம்—கிளை

காங்கயம், அக். 6—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம, 4-10-49-ல் தோழர் தெ. இராஜகோபல் அவர்கள இல்லத்தில், தோழர் த. பாலகுரு தலைமையில நடந்தது. தி. மு. கழக அமைப்பு பற்றித் தோழர்கள. க. வெ. முத்தியாலு, எம. எஸ். பாரி ஆகியோர பேசிய பின், "தி. மு. கழகம-காங்கயம் கிளை" அமைக்கப்பட்டு புதிய செயற் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-க. வே. முத்தியாலு; துணைசெயலாளர்-எம. எஸ். பாரி; பொருள உறுப்பினர்-கே. பி. சானசா, விளம்பர உறுப்பினர்-தெ. ராஜகோபால். ஏனைய செயற் குழு உறுப்பினர்கள்-கே நாச்சி முத்து, ஆர் துரைசாமி, த. பாலகுருநாதன், டி. எஸ். வெங்கடாசலம், அப்துல ரஹிமான், கே. மலைக கொழுந்து, ஆர். அப்துல் ரஜாக். பின் செயலாளர் நன்றிகூற, கூட்டம் இனிது முடிவுற்றது. எனத் தோழர் க. வெ. முத்தியாலு (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### கோவில்பட்டி—கிளை

கோவில்பட்டி, அக். 6—

5-10-49 மாலை 8 மணிக்கு பெருவாரியான உறுப்பினர்களின் சார்பில் இவ்வூர் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு "திராவிட முன்னேற்றக் கழகம்—கோவில்பட்டி கிளை" அமைக்கப்பட்டது. தோழர்கள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஈ. வே. அ. வள்ளிமுத்து, செ. அருணாசலம் ஆகியோரது ஆதரவில் தி. மு. கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. பின்புபுதிய செயற்குழு வொன்று தெரிந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—டபுள்யூ.டி. துரைசாமி; துணைச் செயலாளர்:— எஸ். கே. டி. சாமி. பொருள் உறுப்பினர் :— ஈ. வெ. அ. வள்ளிமுத்து; விளம்பர உறுப்பினர்:—பி. பாலகிருட்டிணன்; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—பொ, மாரியப்பன், த. ரத்தினசாமி, கு. சீனிவாசகம், செ. பொ. துரைசாமி, ப. ராமசாமி, எஸ். மணி, கே. பெருமாள், பொ. தமிழரசன், அ. பொ. திராவிடமணி, கு. பாப்புக்கனி. எம். காசி. பின்பு தீர்மான நிறை வேற்றத்திற்குப்பிறகு நன்றி கூறலுடன் கூட்டம இனிது எனத் தோழர் பொ. பாலகிருட்டிணன் (வி. உறுப்பினர்) தீட்டுகிறார்.

* * *

### விழுப்புரம்—நகரக்கிளை

கீழ்பெரும் பாக்கம, அக். 6 —

விழுப்புரம, கீழ்பெரும்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம, "தொல்காப்பியர் விடுதி"யில் 5—10—49ல் நடைபெற்றது. தோழர் ஆறுமுகம் தலைமை வகித்தார். அவ்வமயம் தி. மு. கழகம் அமைக்கப்பட்டு புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர்:— கே. இராமச்சந்திரன்; துணைச்செயலாளர்:—சிவக்கொழுந்து; நிதி உறுப்பினர்:—கே. பி. நம்மாழ்வார்; விளம்பர உறுப்பினர்:—முத்து ராமன். ஏனைய செயற்குழுவினர்கள்:— எம். சுப்பராயன், பி. கிருஷ்ணன், கோவிந்தராஜு, வி. சுந்தாம், கே. லோகநாதன், கண்ணன், கே.சடகோபன், ஆர். தேவராஜு. செயலாளர் நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் கே. இராமச்சந்திரன் (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

### அரகண்டநல்லூர்—கிளை

அரகண்ட நல்லூர், அக். 6—

இவ்வூர் திராவிடர்கழகம் கலைக்கப்பட்டுத், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஏ.பி. பரசுராமன்; துணைச்செயலாளர்:—ஏ.கே. தங்கவேல்; நிதி உறுப்பினர்:— கலிய பெருமாள். எனத்தோழர் ஏ. பி. பரசுராமன், (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

### தேசுமுகப்பேட்டை—கிளை

தேசமுகப்பேட்டை, அக். 6—

இவ்வூர் பகுத்தறிவுக்கழக உறுப்பினர்களின் கூட்டம தோழர் க. சி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பகுத்தறிவுக் கழகம் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டு, பின் வரும செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- க. சி. துரைசாமி; துணைச் செயலாளர்- வி. திருநாவுக்கரசு; பொருள் உறுப்பினா- என். மாணிக்கம. ஏனைய செயற்குழுவினர்கள்:— சு. குருநாதன், கே. கன்னியப்பன் (சந்தா வசூலிப்பவர்கள்), தா. சுப்பிரமணியம், எம. எல். மணி; மு. நடராசன், தி. ர. கோவிந்தராச, தி. சற்குரு, வி. முருகன். எனத் தோழா வி. திருநாவுக்கரசு (துணைச் செயலாளர்) தீட்டுகிறார்.

* * *

### காஞ்சிபுரம் பெரிய கம்மாளத் தெரு—நகர உட்கிளை

காஞ்சி, அக். 7—

இந்நகர் பெரிய கம்மாளத்தெரு பகுத்தறிவு திராவிட இளைஞர் கழக அங்கத்தினர்களின் கூட்டம் 6-10-49 இரவு கழகக் கட்டிடத்தில் தோழர் எம். இராசு தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், டி கழகத்தைக் கலைத்துவிட்டுத் 'திராவிட முன்னேற்றக் கழகம—காஞ்சி நகர கம்மாளத் தெரு உட்கிளை" அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. பின்பு புதிய செயற்குழுதேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- இ. எத்திராசன்; துணைச செயலாளர்- எம. இராசு; நிதி உறுப்பினர்கள்- கே. வரதன், பி. எழுமலை; விளம்பர உறுப்பினர்கள- வி. என். மார்கு, சி. எம். குப்புசாமி. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—எம். எம். பழனி, சி. எம. யாமே, ஆர். கான்உசேன், சகன்னாதன், ஏ. வீரபத்திரன், டி. சோமசுந்தரம, எம. இராசமன்னார், வி. கணேசன், சயலாப். பின் செயலாளர் நன்றிகூறக் கூட்டம்இனிது முடிவுற்றது. எனச செயலாளர் எழுதுகிறார்.

* * *

### கூசாலிப்பட்டி—கிளை

கூசாலிப்பட்டி, அக். 7—

இவ்வூரில்6-10-49இரவு, தோழர் சி. மு. சாமி அவர்கள தலைமையில் திராவிடத் தோழர்கள் கூடி "திராவிட முன்னேற்றக் கழகம—கூசாலிப் பட்டிக் கிளை" நிறுவினர். பின் கண்ட செயற் குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:— ஞா. சுப்பையா; பொருள உறுப்பினர்-ச. முத்து; விளம்பர உறுப்பினர்-சி. மு. சாமி. ஏனைய செயலுறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, செயலாளருக்கு உரிமை யளிக்கப்பட்டது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

---

### வள்ளுவர் மன்றம்

கல்லல, அக். 6—

5—10—49 புதன் மாலை 6 மணிக்கு இவ்வூர் தோழர், வி. ஈ. பழனியப்பன அவர்கள் இல்லத்தில் தோழர் கே. எஸ். திருப்பதி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் "வள்ளுவர் மன்றம" என்றப்பெயருடன் ஓர் கழகம அமைக்கப்பட்டு, செயற்குழுவொன்றும் நிறுவப்பட்டது. டி மன்றம திராவிட முன்னேற்றக்கழகத்தோடு சேர்ந்து பணியாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர்:-கே.எஸ். திருப்பதி; நிதி உறுப்பினர்:—என். எல. எம். இராமசாமி; விளம்பர உறுப்பினர்:- எஸ். மகாதேவன். ஏனைய செயற்குழுவினர்கள்:—வி. ஈ. பழனியப்பன், கே. எம். நாச்சியப்பன, எம். ஏ. சோமசுந்தரம. எனத்தோழர் எஸ். மகாதேவன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.


### ஏஜண்டுகள் தேவை

நவம்பர் மாதம் வெளிவரும்

"மக்கள் மணி"

(மாத மிருமுறை. சினிமா, அரசியல் தழ்)

தனி இதழ் 2 அணா.

ஆண்டு சந்தா ரூ. 3.

இதழ் ஒன்றுக்கு ¼ அணா கட்டக் கூடிய ஏஜண்டுகள் எல்லா ஊரிலும் உடனே தேவை.

விபரங்கட்கு:—"நிர்வாகி" 84, பிடாரியார்கோயில் தெரு, சென்னை-1.

### பெண் தேவை

40 வயதுள்ள ஓர் முதலியார் வகுப்பைச் சார்ந்த ஒருவருக்கு ஓர் விதவைப பெண் தேவை. பெண் நல்ல அழகும் குறைந்த அளவு எழுதப்படிக்கத் தெரிந்திருப்பதும் நலம். மணமகன் மாதம் ரூ 150 க்குக் குறையாத வருமானமுள்ளவர். விவரங்களுக்கு புகைப்படத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளவும.

N. V. K.

C/o "மாலை மணி" ஆபீஸ்

2/45 முத்துமாரிச செட்டித் தெரு, சென்னை-1.


Printed & Published by P. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.